# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 11 நவம்பர் 2024 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-

Vol : 10 Issue No :11 November 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



# தீர்க்கதரிசனத்தின்படி திருமணம் நடைபெற்றது!



என் மகளுடைய திருமணத்திற்காக மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருந்தோம். அநேக தடைகள் வந்துக் கொண்டிருந்தது. நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு நானும் என் மகளும் வந்திருந்தோம். கூட்டம் முடிந்து தனிஜெப நேரத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என்ன சொல்வது என தெரியாமல் திகைத்து நின்றோம். அந்த நேரத்தில் ஐயா என் மகளைப் பார்த்து, "உனக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைத்து, நீ வெளிநாட்டிற்கு போவாய், மாப்பிள்ளை கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறவராகவும், வேதத்தை இதயத்தில் எழுதி வைத்தவராகவும் இருப்பார்" என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். ஐயா சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே மகளுக்கு வெளிநாட்டில் வேலை செய்கிற நல்ல மாப்பிள்ளை கிடைத்து, மகளுடைய திருமணம் சிறப்பாக நடைபெற கர்த்தர் உதவி செய்தார். மகளும் இரண்டுமுறை வெளிநாடு சென்றுவர கர்த்தர் இரங்கினார். அதற்காக கர்த்தரை துதிக்கிறோம். எங்களுக்காக ஜெபித்த ஐயாவிற்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

– திருமதி. ராணி, பள்ளியாடி.

# கட்டி மறைந்தது

எனது வயிற்றில் fibroid கட்டிகள் 7 இருந்தது. மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு ஆப்ரேஷன் செய்யவேண்டும் என சொல்லிவிட்டார்கள். திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என்னுடைய மெடிக்கல் ரிப்போர்டை காண்பித்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடனே ஐயா அவர்கள் பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்திற்குப் பிறகு தேவ கிருபையால் கட்டி வெளியே வந்து விட்டது. ஆப்ரேஷன் இல்லாமல் அற்புத சுகம் தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

– Sis. அன்னமேரி ஜெபக்கனி, திருநெல்வேலி.

dranandastira@mojindia.org

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 10 ♦ நவம்பர் 2024 ♦ இதழ் 11

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



Dr. ஜேன் ஜாஷ்வா

நம் ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். இந்த பத்து மாதங்கள் நம் ஒவ்வொருவரையும் தம் கண்மணியைப் போல பாதுகாத்து வந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம்.

- நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படு வான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.

  யோவான் 10:9

- ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர். மத்தேயு 7:14

இயேசு என்னும் வாசல் வழியாக ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்கள் ஒரு சிலரே. ஆத்தும இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும், வழியாக வாசலாக இருப்பவர் இயேசு ஒருவரே! ஆகவே இடுக்கமான வாசலாகிய இயேசுவை நாம் தெரிந்துக் கொள்வோம். கேட்டுக்கு போகிற வாசல் விசாலமான தாக இருக்கும். விசாலமான வாசலை தேர்ந்தெடுத்து அழிந்துப் போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள். நம் வாழ்க்கையின் மூலமாக, நம் ஜெபத்தின் மூலமாக, நம் வார்த்தையின் மூலமாக ஜனங்கள் இயேசுவை தேர்ந்தெடுக்கும்படி வழிநடத்துவோம். இதுவே நமக்கு தலையாய கடமையாகும்.

உலகில் நடைபெறும் காரியங்களைப் பார்த்து சோர்ந்து போகாதீர்கள். நம் வாழ்வில் சந்திக்கிற துன்பங்கள், பிரச்சனைகள் எல்லாவற்றிலும் கர்த்தர் ஒரு தெய்வீக நோக்கத்தை வைத்திருக்கிறார்.

அக்டோபர் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். நவம்பர் மாதம் செகந்திராபாத், விஜயவாடா, தாம்பரம், அருப்புக் கோட்டை மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். உங்கள் பகுதியில் கூட்டங்களை நடத்த விரும்புகிறவர்கள் எங்களை தொடர்புக்கொள்ளுங்கள்.

இதுவரை பத்திரிக்கைக்குரிய வருட சந்தாவை புதுப்பிக்காதவர்கள் உடனடியாக சந்தா

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

தொகையை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

நமது Ministry of Jesus You Tube சேனலில் தினந்தோறும் வெளிவருகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியை நாங்கள் குடும்பமாக வழங்கி வருகிறோம். அன்பரின் ஊழிய பங்காளராகிய நீங்கள் இந்த நிகழ்ச்சியை தினந்தோறும் தவறாமல் பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் Share பண்ணுங்கள் நம்பிக்கை டி.வி. மூலம் வெளிவருகிற அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை பாருங்கள். டி.வி. ஊழியத்தை உற்சாகமாய் தாங்குங்கள்.

அன்பரின் ஊழியத்திற்காக, S.J.Saves Trust பணிகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

எங்கள் அப்பா அம்மா இருவரின் நல்ல சுகம், பெலன், ஆரோக்கியத்திற்காக, நீடிய ஆயுளுக்காக ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சுகத்திற் காகவும் ஜெபியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

jane@mojindia.org

## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**1சாமுவேல் 26:25; சங்கீதம் 18:35; ஏசாயா 41:9; யோவான் 14:27**

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்




“ இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம். ”

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.



# சந்ததிகளுக்கான ஆசீர்வாதம்

தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

அன்பரின் ஊழிய பங்காளர்களே, பத்திரிக்கை வாசகர்களே, உங்கள் ஒவ்வொரு வரையும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன். இந்த மாத செய்தி உங்கள் சந்ததிகளுக்காக எழுதப் பட்டுள்ளது. விசுவாசத்துடன் வாசியுங்கள். கர்த்தர் உங்கள் சந்ததிகளுக்கு பெரிய காரியங்களை செய்வார். அவர்களை விசுவாச சந்ததிகளாய் மாற்றுவார்.

உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். ஏசாயா 44:3

மேற்கண்ட வசனத்தில் சந்ததி என்பதை ஆண்டவர் அதிக முக்கியப்படுத்தி சொல்லியிருக் கிறார். ஏனென்றால் சந்ததி என்பது ஒரு குடும்பத்தின் நிறைவான ஆசீர்வாதம் மற்றும் கர்த்தரால் கிடைக்கப் பெறுகிற சுதந்தரம் ஆகும். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். சங்.127:3.

உதாரணமாக ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தல் வரை குடும்பத்தையும் சந்ததி களையும் கர்த்தர் மையப்படுத்தி இருக்கிறார். ஆதாமை உருவாக்கினபொழுது ஆதாமிற்கு ஏற்ற துணையாக ஏவாளையும் உருவாக்கினார். அவர்கள் பாவம் செய்தப்போதும் அவர்களை கைவிடாமல் சந்ததிகளை தந்தார்.

நோவாவின் காலத்தில் பாவம் பெருகின பொழுது கர்த்தர் பூமியை அழித்துப்போட்டார். அப்பொழுது நோவாவும் அவனுடைய குடும்பம் மட்டும் பெருவெள்ளத்திற்கு தப்புவிக்கப்பட்டது. நோவாவுக்கு தேவனின் கண்களில் கிருபை கிடைத்தது. எனவே நோவா மாத்திரம் அல்லாமல் நோவாவின் மகன்கள், மருமக்கள்மார் அனைவரும் பாதுகாக்கப்பட்டனர்.

ஆம். குடும்பம் என்பது தேவனால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. எனவே, இந்த அமைப்பை அழிக்க வேண்டுமென்பது பிசாசின் திட்டமாக இருக்கிறது. முதல் கட்டமாக அவன் தாய் தந்தை இடையே பிரச்சனைகளை கொண்டு வந்து அவர்களை விவாகரத்தின் மூலம் பிரிக்க நினைக்கிறான். குடும்பத்தை பிரிக்கும்பொழுது அங்கு பிள்ளைகள் அன்பற்ற சூழ்நிலைக்கு, பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு உள்ளாகின்றனர். அதன் மூலம் பிசாசானவன் பிள்ளைகளை பாவத்தின் காரியங்களுக்கு எளிதாக நடத்திச் செல்கிறான். இப்படிப்பட்ட காரியங்கள் நம்மை சுற்றிலும் நடக்கிறதை பார்க்கிறோம். இவைகளின் மத்தியில் "உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" என கர்த்தர் சொல்கிறார்.

# உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள்

## ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு

முதலாவது தேவன் நம்மையும் நம் சந்ததிகளையும் உலகப்பிரகாரமாக ஆசீர் வதிக்கிறார். வேதத்தில் எழுதப்பட்ட ஒரு சிலரைக் குறித்து நாம் இங்கே பார்ப்போம்.

### ஐசுவரியம்

கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர் வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார், கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக் காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத் திருக்கிறார். ஆதி.24:35

ஆபிரகாமின் வீட்டு விசாரணைக்கர்த்த னாய் இருந்த எலியேசர் தன் எஜமானாகிய ஆபிரகாமைக் குறித்து மேற்கண்ட வசனத்தில் சொல்கிறார். ஆபிரகாம் ஒருவனாய் இருந்தப் பொழுது கர்த்தர் அவனை அழைத்து ஆசீர்வதித்தார். அந்த ஆசீர்வாதத்தினால் அவன் சீமானாக வாழ்ந்தான், திரளான ஜாதிகளுக்கு தகப்பனாகவும் மாறினான். அவனுக்கு ஏராளமான ஆடு மாடுகள் இருந்தது. வெள்ளி, பொன் மற்றும் வேலைக் காரர்கள், ஒட்டகங்கள் கழுதைகள் எல்லாம் இருந்தது. அத்துடன் அவன் பேரை இன்று வரை கர்த்தர் பெருமைப்படுத்தி வருகிறார்.

ஒரு சில பெற்றோர் தங்கள் பிள்ளை களுக்கு சொத்துக்களை சேர்த்து வைத்தால் போதும் பிரச்சனை இல்லை என நினைக் கின்றனர். இருந்தாலும் சில பிள்ளைகள் தங்கள் முன்னோரின் சொத்துக்களையெல்லாம் இழந்து ஒன்றும் இல்லாமல் போகிற நிலைக்குகூட சில நேரங்களில் வந்துவிடுகிறார்கள். காரணம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அவர்கள் பெறாத நிலையில் பொல்லாத பிசாசு அவர்களை வழி விலகிபோகச்செய்து, பலவிதமான பிரச்சனை களைக் கொண்டு வந்து முடிவில் அனைத்தையும் இழந்து போகிற நிலைக்கு தள்ளிவிடுகிறான்.

ஆபிரகாமின் தகப்பன் தாய் வேறே தேவர் களை சேவித்தவர்கள். ஆனால் ஆபிரகாம் கர்த்தரை அறிந்து கர்த்தருக்காக வைராக்கியமாக வாழ்ந்ததன் நிமித்தம் கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை தலைமுறை தலைமுறையாய் ஆசீர்வதிக்கிறவராக இருக்கிறார். இன்றைக்கு நீங்கள் ஆபிரகாமைப் போல மாறுங்கள். உங்கள் சந்ததியும் ஆபிரகாமின் சந்ததியாக மாறும்.

ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான், கர்த்தர் அவனை ஆசீர் வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். அவன் ஐசுவரிய வானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான். ஆதி.26:12-13

ஆபிரகாமின் மகனான ஈசாக்கை கர்த்தர் ஆசீர்வதித்தார். அதனால் அவன் ஐசுவரியவானான், விருத்தியடைந்தான், மகா பெரியவனானான். கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லாத வாழ்வில் விருத்தி என்பதே இருக்காது, பெருக்கம் இருக்காது. கர்த்தர் தாமே ஈசாக்கை தொடர்ந்து ஆசீர்வதித்துக் கொண்டே இருந்தார். தேசத்தில் பலுகும்படிக்கு இடமும் உண்டாக்கி தருகிறார். ஈசாக்கு விதைத்த விதை நூறு மடங்காக பலன் தரும்படி செய்தார், அவன் வேலைக்காரர் தோண்டின துரவில் எல்லாம் தண்ணீர் ஊற்றெடுத்து வந்தது. ...நாம் தேசத்தில் பலுகும் படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட் டான்.(ஆதி.26:22)

நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார். ஆதி.17:8 ஆபிரகாம் பரதேசியாக சுற்றி திரிந்தான். பரதேசி என்பது துணைக்கு யாரும் இல்லாத, ஒரு உறவும் இல்லாத நிலை. அந்நிலையில் வாழ்ந்த ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம் "நீ சுற்றி வந்த இடம் முழுவதையும் தருவேன்" என கர்த்தர் சொன்னார். யாக்கோபின் வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. ஈசாக்கு போகிற இடமெல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்தார். அந்த இடங்களை சுதந்தரிக்கும்படி செய்தார்.

ஆபிரகாம் பரதேசியாக சுற்றி திரிந்த அந்த நாட்களில் கர்த்தர் அழைத்து, நீ கால் மிதிக்கும் தேசமெல்லாம் உனக்கும், உன் சந்ததிக்கும் சுதந்திரமாக கொடுப்பேன் என்று ஆதியாகமம் 17:8-ல் கூறினார்.

அந்த சுதந்திரத்தை ஈசாக்கு தன் வாழ்க்கையில் கொஞ்சம் அடைந்தான். ஈசாக்கிற்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். யாக்கோபு தன் தகப்பனின் சுதந்திரத்தை தவறாக எடுத்துக் கொள்ள வேண்டும் என நினைத்ததினிமித்தம் ஒரு கட்டத்தில் தனக்கு இருந்த எல்லாவற்றையும் இழந்து போனான்.

இறுதியில் ஒரு கல்லை தன் தலையின் கீழ் வைத்து படுத்திருந்தான். அங்கே கர்த்தர் தரிசனமாகி, உன் தகப்பன் ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், என அவனோடு பேசி, உனக்கும் உனக்குப் பின்வரும் இந்த சந்ததிக்கும் நீ படுத்திருக்கிற பூமியை தருவேன் என வாக்குப் பண்ணினார்.

ஆம். பிரியமானவர்களே, பரதேசியாக அலைந்த ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணின கர்த்தர் அவனுடைய சந்ததிக்கு அந்த தேசம் முழுவதையும் சுதந்தரமாகத் தந்தார். ஈசாக்கு ஒரு சில இடங்களையே சுதந்தரித்தான். யாக்கோபு காலத்தில் இன்னும் அதிகமான இடங்களை சுதந்தரித்தான், இன்னும் அதிக ஐசுவரியவானாக மாறினான், பிள்ளைகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமானது. இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள். ஆதி.30:24

யாக்கோபின் இந்த ஆசீர்வாதங்கள் யோசேப்புக்கும், அவன் பிள்ளைகளுக்கும் கடந்து சென்றது.

பிரியமானவர்களே, நீங்களும் ஒன்றும் இல்லாத நிலையில் அனைத்தையும் இழந்து போய் நிற்கிறீர்களா? ஆபிரகாமின் தேவன் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் உலகப் பிரகாரமான ஆசீர்வாத பெருக்கத்தை காணச் செய்வார்.

## எண்ணிக்கையில் பெருக்கம்

உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப் பாருங்கள், அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன். ஏசாயா 51:2

ஆபிரகாம் ஒருவனாய் இருந்தப்பொழுது கர்த்தர் அவனை அழைத்து எண்ணிக்கையில் பெருக்கத்தை ஏற்படுத்தினதை மேற்கண்ட வசனத்தின் மூலம் அறியலாம். உன் சந்ததியை பூமியின் தூளைப்போல பெருகப்பண்ணுவேன், வானத்து நட்சத்திரங்களைப்போல பெருகப் பண்ணுவேன் என்று கொடுத்த வாக்குத்தத்தம் எண்ணிக்கையில் அடங்காத காரியங்களாகும். ஆபிரகாமுக்கு கர்த்தர் வாக்குத்தத்தம் கொடுக்கப்

பட்ட போதும்கூட ஆபிரகாமுக்கு ஈசாக்கு என்ற ஒரு குமாரன்தான் இருந்தான். மனுஷீகமாக இது எப்படி சாத்தியமாகும் என யோசிக்கலாம்.

அடுத்து ஈசாக்குக்கு கர்த்தர் இரண்டு பிள்ளைகளை கொடுத்தார். யாக்கோபுக்கு 12 பிள்ளைகளை கொடுத்தார். எகிப்திற்கு சென்றப்பொழுது யாக்கோபின் சந்ததி 70 பேராக சென்றார்கள். எகிப்திலிருந்து திரும்பி வரும்பொழுது இலட்சக்கணக்கான மக்களாக ஆசீர்வதித்து, திரும்பி வரச்செய்தார். பூமியின் மணலைப் போல உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்றும், நட்சத்திரங்களைப்போல பெருகப் பண்ணுவேன் என்றும் சொன்ன கர்த்தர் அதை அப்படியே நிறைவேற்றினார். அறிவியல் ஞானத்தில் நட்சத்திரங்கள் தான் பூமியின் மணல் துகள்களைவிட அதிகமாம். உலக பிரகாரமாக ஆபிரகாமின் சந்ததியை பூமியின் மணலைப் போல பெருகப்பண்ணினார். ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆபிரகாமின் சந்ததியை நட்சத்திரங்களைப்போல பெருகப் பண்ணி னார்.

## கனத்திலும் மகிமையிலும் பெருக்கம்

எண்ணிக்கையில் ஆபிரகாமின் சந்ததியை ஆசீர்வதித்த கர்த்தர் கனத்திலும், மகிமையிலும் ஆபிரகாமை பெருகப்பண்ணினார். ஆபிரகாமைக் கண்டு அநேக பெரிய ராஜாக்கள் பணிந்தார்கள், அதைக்காட்டிலும் அதிகமாக ஈசாக்கை கண்டு இராஜாக்கள் பணிந்தார்கள், பயந்தார்கள். யாக்கோபைக் குறித்து வேதம் சொல்லும்பொழுது யாக்கோபின் குடும்பத்தைக்குறித்து பயங்கரம் ஜனங்களுக்கு உண்டானது. …அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால், அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின் தொடராதிருந்தார்கள். ஆதி.35:5 அடுத்த சந்ததி யோசேப்பிற்கு வரும்போது பூமியின் தேசத்தார் அனைவரும் யோசேப்பினிடத்தில் வந்து பணிந்து தானியம் பெறும்படி வந்தனர்.

ஆம். பிரியமானவர்களே கர்த்தர் உங்களையும், உங்கள் சந்ததியையும் இதே விதமாக பெருகச் செய்வார். உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தில் மாத்திரமல்ல, எண்ணிக்கையிலும் கனத்திலும் மகிமையிலும் பெருகச்செய்வார்.

நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. சங்.37:25

நீதிமானுடைய சந்ததிக்கு அப்பம் குறைவுபடாது என தாவீது சொல்வதற்கு காரணம் என்ன? அவன் ஒரு காலத்தில் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தப்பொழுது கர்த்தரே அவனை போஷித்தார். தாவீது அரசனாக இருந்தப்பொழுது கர்த்தரே அவனை வழிநடத்தினார். தாவீது கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்ட பொன், வெள்ளி, விலையுயர்ந்த கற்களை சேர்த்து வைத்திருந்தான். ஆனால் சாலமோனின் காலத்திலோ வெள்ளி ஒரு பொருட்டாக எண்ணப்படவில்லை. அவனுடைய சிங்காசனம், அரண்மனை, ஆலயம் அனைத்தையும் தங்கத்தால் நிரப்பி இருந்தான். இவ்வாறு அவன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் கர்த்தர் கொடுத்தார். தாவீதின் நிமித்தம் அவன் சந்ததியில் வந்த சாலோமோனை கர்த்தர் மேன்மைப்படுத்தியிருந்தார்.

ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல தாவீதை ஆசீர்வதித்தது போல கர்த்தர் உங்களையும் உலக பிரகாரமான காரியங்களில் எல்லாம் ஆசீர் வதிக்கவே விரும்புகிறார். நான் கர்த்தருக்கு பயந்து வாழ்கிறவன் ஏழையாக இருக்கவேண்டும் என்ற

நியதி இல்லை. சகலத்தையும் சுதந்தரித்துக் கொண்டு நீங்களும் உங்கள் சந்ததியும் ஆசீர்வாத மாக வாழ கர்த்தர் உதவி செய்வார். உலகப்பிரகார மாக மட்டுமல்ல, ஆவிக்குரிய பிரகாரமாகவும் கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கவே விரும்புகிறார்.

## ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

### ஆரோன், யோசுவா, எலிசா, அப்போஸ்தலர்கள்

வானத்து நட்சத்திரங்கள் ஆபிரகாம் மூலம் உண்டாகுகிற ஆவிக்குரிய சந்ததியைக் குறிக்கிறது. தானியேல் 12:3-ல் ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத் திரங்களைப் போலவும் என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். கர்த்தருக்குள் நாம் எல்லாம் ஆபிரகாமின் சந்ததி. ஆவிக்குரிய பெருக்கத்தை ஆண்டவர் அப்பொழுதே உருவாக்கி விட்டார். ஆபிரகாம் ஆண்டவருடைய சிநேகிதன், கர்த்தருக்கு பயந்தவன், நீதிமான். அதனால் பூமிக்குரிய பிரகாரமாக மட்டும் அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஒரு பெருக்கத்தை கட்டளையிட்டுள்ளார். கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட நாம் ஒவ்வொருவருமே ஆபிரகாமின் வழிவந்த ஆவிக்குரிய சந்ததி களாகவே இருக்கிறோம்.

உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரராகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக் கொள்வாயாக - யாத்.28:1

பழைய ஏற்பாட்டிலே ஆரோனின் சந்ததிக்கு மட்டுமே நித்திய நித்தியமாக ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு கர்த்தர் கட்டளை கொடுத்திருந்தார். அவர்களுக்கான பரிசுத்த வஸ்திரத்தையும் உடுத்தி, ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவர்களை அபிஷேகம் பண்ணி அவர்களை பரிசுத்தப்படுத்தி னார். ஆரோனை மட்டுமல்ல அவன் சந்ததி களுக்கும் அங்கிகளை உடுத்தி, கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களை அபிஷேகம் செய்தார். அந்த அபிஷேகம் தலைமுறைதோறும் நித்திய ஆசாரித்துவத்திற்கு ஏதுவாயிருக்கும். (யாத்தி.40:13-15) ஆம். கர்த்தர் யாரை குறிப்பிட்டு அழைத்து இருக்கிறாரோ அந்த அழைப்பை எவராலும் மாற்ற முடியாது. ஒவ்வொரு சந்ததியாக அந்த அழைப்பும் அபிஷேகமும் கடந்து செல்லும்.

ஆரோன் தவறு செய்தபொழுதும் ஆண்டவர் அந்த ஆசாரித்துவ அழைப்பை அவனை விட்டு எடுத்து விடவில்லை. எண்ணாகம் 16-ம் அதிகாரத்தில் ஆரோனுக்கும், மோசேக்கும் எதிராக வேறு ஒரு சந்ததியில் வந்த கோராகு முறுமுறுத் தான். ஆரோன் மட்டும் தானா? கர்த்தருடைய ஜனம் எல்லாருமே பரிசுத்த சந்ததிதானே என்றான். ஆரோனுக்கு எதிராக எழுந்த கோராகு, தாத்தான், அபிராம் அனைவரையும் பூமி விழுங்கிப் போட்டது. அவர்களுடைய கூடாரம் முதற்கொண்டு பூமிக்குள் போய்விட்டது. பூமி தன் வாயைத்திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள் களையும் விழுங்கிப்போட்டது. எண்.16:32

ஆம். பிரியமானவர்களே, கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு எதிராக ஒரு வார்த்தைக் கூட பேசாதிருங்கள். அவர்கள் கர்த்தரால் அபிஷேகம் பெற்றவர்கள். இந்த ஆசாரியத்துவத்தின் பிரச்சனைக்கு தேவன் ஒரு முடிவு உண்டாக்கினார். ஆண்டவர் மோசேயிடம், அவர்கள் பிதாக்களின் வம்சங்களில் ஒவ்வொரு சந்ததியாக பன்னிரண்டு கோலை கொண்டு வரச்சொல்லி, அதில் அவனவன் பேரை எழுதும்படி சொன்னார். லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதச் சொன்னார். இந்த கோல்கள் அனைத்தையும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கும்படி சொன்னார். அப்பொழுது "நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் மட்டும் துளிர்க்கும்; இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை ஒழியப்பண்ணுவேன்" என்றார். அதே போல மறுநாள் பார்த்தப்பொழுது லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. (எண்ணாகமம் 17:8) ஆரோனுக்கு பிறகு லேவியர் சந்ததி சந்ததியாக கர்த்தருடைய ஊழியத்தை செய்தார்கள். அதை யாராலும் மாற்ற முடியவில்லை.

இப்படித்தான் ஆவிக்குரிய பிரகாரமாக ஆண்டவர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் தெரிந்துக்கொள்ளும்பொழுது உங்களை எந்த மனிதர்களாலும் அழித்துப்போட முடியாது. மேலும், ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. எபி.5:4.

## யோசுவா

மாம்ச பிரகாரமான சந்ததியில் அல்லாதவர்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்தார்கள் என்பதற்கு உதாரணமாக யோசுவா இருக்கிறான். மோசே வல்லமையான ஒரு தீர்க்கதரிசி. இவரைப் போல கர்த்தரோடு முகமுகமாய் பேசியவர் ஒருவருமில்லை, மோசேயிடம் ஆண்டவர் கூறியது, "மோசே உன் காலம் முடியப்போகிறது. நீ கானானுக்குள் போகமாட்டாய். என்னுடைய சமூகத்தில் நிற்கிற யோசுவாவை நீ ஆயத்தப் படுத்து" என்றார். அதன்படியே மோசே யோசுவாவை அபிஷேகம் பண்ணினான். கர்த்தர் கட்டளையிட்டபடியே அவனுக்குரிய கனத்தை தந்தான்.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கு பல சமயங்களில் கீழ்ப்படியாமல் நடந்தார்கள். ஆனாலும் மோசேயை பகைத்துக்கொண்டால் குஷ்டம் வந்துவிடும், தண்டனை வந்துவிடும் என்பதற்காகவே பயந்தார்கள். இப்படி மோசேக்கு எதிராக முறுமுறுத்த ஜனங்கள் அவருக்கு உதவியாக இருந்த யோசுவாவுக்கு கீழ்ப்படிவார்களா? என்ற நிலையில்தான் கர்த்தர் யோசுவாவை தெரிந்துக்கொண்டார். நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:7 என ஆண்டவர் வாக்குக்கொடுத்து அவனை பெலப்படுத்தினார், கானானுக்குள் மக்களை வழிநடத்தி செல்கிற மிகப்பெரிய பொறுப்பை தந்து அவனை மேன்மைப்படுத்தினார். அந்நாளிலே கர்த்தர் யோசுவாவைச் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாகவும் மேன்மைப் படுத்தினார், அவர்கள் மோசேக்குப் பயந்திருந்தது போல, அவனுக்கும், அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் பயந்திருந்தார்கள். யோசுவா 4:14

மோசேக்கு முன்பாக கடல் இரண்டாக பிளந்தது. ஆனால் யோசுவாவின் கட்டளைக்கு சூரியனும் சந்திரனும் கீழ்ப்

படிந்து நின்றது. மனுஷனுடைய வார்த்தையை தேவன் கேட்ட இந்த நாள் அதற்கு முன்பும் இல்லை அதற்கு பின்பும் இல்லை என்று வேதம் சொல்லுகிறது. எனக்கு பிள்ளைகள் இல்லையே என்று கலங்காதீர்கள். யோசுவாவை தெரிந்தெடுத்து ஆசீர்வதித்த தேவன் நிச்சயமாய் உங்களுக்கும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கொடுத்து பெருகப்பண்ணுவார். மாம்ச பிரகாரமாக ஈசாக்கையும், ஆவிக்குரிய பிரகாரமாக யோசுவாவையும் தந்து களிகூரப்பண்ணுவார். ஆம். ஆண்டவர் ஆவிக்குரிய பிரகாரமாக ஆசீர்வதிக்கும்பொழுது நிச்சயமாக அங்கு ஒரு பெருக்கம்தான் உண்டாகிறது. உலகப்பிரகாரமான பெருக்கத்தை உண்டாக்குகிற தேவன் ஆவிக்குரிய பிரகாரமாகவும் உங்கள் சந்ததிகளை பெருகப் பண்ணுகிறார்.

## எலிசா

...அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான். 2இராஜாக்கள் 2:9

எலியா, எலிசா தீர்க்கதரிசிகளைக் குறித்து நாம் வேதத்தில் வாசிக்கிறோம். உமது ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாக கிடைக்கும்படி வேண்டுகிறேன் என எலிசா கேட்டபடியே பெற்றுக் கொண்டான். எலியாவின் அபிஷேகம் எலிசாவிற்குள் இரட்டிப்பாக இருந்ததை எலிசாவின் மரணத்தின் மூலம் அறிந்துக்கொள்ள முடியும்.

இறந்த ஒரு மனுஷனை அடக்கம்பண்ணப் போகையில், எதிரி நாட்டின் படை வருவதைக் கண்டு அந்த சடலத்தை அப்படியே போட்டுவிட்டு சென்று விட்டார்கள். அந்த இடம் எலிசாவின் கல்லறையாக இருந்தது. அந்த செத்த சடலம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின் மேல்பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான். (2இராஜாக்கள் 13:21) அவ்வளவு வல்லமை எலிசாவுக்குள் இருந்தது.

## அப்போஸ்தலர்கள்

புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும்போது இயேசு கிறிஸ்து, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது, வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றார். மாற்கு 16:17-18 இயேசுவை விசுவாசிக்கிறவனே இயேசுவின் சந்ததி ஆவான். இந்த வசனத்தில் கூறப்பட்ட அத்தனை அடையாளங்களும் இயேசுவின் சந்ததிக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத்தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்". யோவான் 14:12 ஆம். இயேசுவை விசுவாசிக்கிறவன் அவரைக் காட்டிலும் பெரிய காரியங்களை செய்வான். இதற்கு உதாரணமாக பேதுருவை குறித்து பார்ப்போம். பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப் பட்டார்கள்.

இயேசு பூமியில் வாழ்ந்தப்பொழுது அவர் விதைத்தவைகளை அப்போஸ்தலர்கள் அறுவடை செய்தார்கள். இயேசு அவர்களுக்கு சகலத்தையும் சுலபமாக்கி கொடுத்துவிட்டு சென்றார். அதேப் போல ஆவிக்குரிய பிரகாரமாய் உங்கள் சந்ததிகளுக்கு கர்த்தர் அனைத்தையும் சுலபமாக்கித் தருவார். ஆவிக்குரிய பிரகாரமாக நீங்கள் பிசாசுடன் போராடி ஆசீர்வாதங்களை பெற்றிருப்பீர்கள். ஆனால் உங்கள் சந்ததியின் மூலம் ஒரு வார்த்தையினால் பிசாசு நடுங்கும்படி செய்வார். பிசாசு உங்கள் பிள்ளைகளை தொடாதபடி பாதுகாப்பார்.

உலகப்பிரகாரமான பல போராட்டங்களை நீங்கள் கடந்து வந்திருக்கலாம். பிச்சை எடுத்துக்கூட வாழ்ந்திருக்கலாம். ஆபிரகாம் ஒரு பரதேசியாக திரிந்தான், ஆனால் ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு முன்பாக, தேசங்கள் நடுங்கும்படி கர்த்தர் செய்தார். அதுதான் நமக்கு இருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். நம்மைக் காட்டிலும் நம்முடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் ஆவிக்குரிய பிரகாரமாய் உலகப்பிரகாரமாய் ஆசீர்வாதங்களை அருளுகிறவராயிருக்கிறார். தகப்பன் கஷ்டப்பட்டிருந்தால் பிள்ளை கஷ்டப்பட வேண்டும் என்பது கிடையாது. அதை நான் சுலபமாய் மாற்றித்தருவேன் என இயேசு சொல்கிறார்.

கர்த்தர் வாக்குக் கொடுத்துவிட்டால் ஒருபோதும் மாற்றமாட்டார். தகப்பனுக்கு ஆண்டவர் ஒரு வாக்கு கொடுத்துவிட்டால் அது அவனுடைய பிள்ளைக்கும், பிள்ளைகளுடைய பிள்ளைகளுக்கும் என சந்ததி சந்ததியாக சென்றுக் கொண்டே இருக்கும். இவை எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு நிபந்தனை மட்டுமே உண்டு. என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன். உபா. 5:10. நீங்கள் கர்த்தருக்கு பயந்து அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கட்டளைகளின்படி நடக்கும்பொழுது உங்கள் நிமித்தம் அவர் ஆயிரம் தலைமுறைக்கு இரக்கஞ்செய்கிறவராகவும், ஆசீர்வதிக்கிறவராகவும் இருக்கிறார். உங்கள் நிமித்தம் உங்கள் பிள்ளைகளுக்கு எந்த போராட்டமும் வராது. நீங்கள் கர்த்தருக்கு பயந்து நடக்கும்பொழுது உங்கள் பிள்ளைகளுக்கு அடைக்கலம் உண்டு. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திட நம்பிக்கை உண்டு, அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும். நீதி.14:26

ஒரு வேளை நீங்கள் நினைக்கலாம், நானே அதிக கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறேன். என்னுடைய பிள்ளைகளுக்கு எப்படி ஆசீர்வாதங்களை சேர்த்து வைக்கமுடியும் என கலங்காதீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் ஆண்டவருக்கு பயந்து நடந்தால் போதும். உங்கள் நிமித்தம் உங்கள் பிள்ளைகளை கர்த்தர் தமக்குள் நடத்துவார். உங்கள் நிமித்தம் உங்கள் பிள்ளைகளை பெருகப்பண்ணுவார். உங்கள் நிமித்தம் உங்கள் போராட்டம் உங்கள் பிள்ளைகளுக்கு வராது. உங்கள் நிமித்தம் உங்கள் பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஆபிரகாமின் நிமித்தம் நாமெல்லாரும் ஆசீர்வதிக்கப்படுகிறோம் என்றால் யோசித்துப் பாருங்கள். எத்தனை சந்ததி கடந்து போய்விட்டது. ஆண்டவர் வாக்குத்தத்தத்தை மறந்து விடவில்லை. தொடர்ந்து ஆசீர்வதித்துக் கொண்டே இருக்கிறார். உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள், உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். ஏசா 54:13 உங்கள் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருக்க வேண்டுமானால் இரண்டு காரியங்களை

ஆண்டவரிடம் நீங்கள் கேட்க வேண்டும். ஒன்று உங்கள் சந்ததியின்மேல் கர்த்தருடைய கிருபை தங்கவேண்டும். மற்றொன்று பிள்ளைகள் கர்த்தருக்கு பயந்து நடக்க வேண்டும். இந்த இரண்டு காரியங்களையும் ஆண்டவரிடம் கேளுங்கள். அப்பொழுது மற்ற எல்லா ஆசீர்வாதமும் தானாகவே வந்துவிடும். பிள்ளைகள் சரியாக படிக்கவில்லையா, அரசு வேலை இல்லையா? கலங்க வேண்டாம்! அரசு வேலைக்காக ஆண்டவரை மறுதலிக்க வேண்டாம். கிறிஸ்துவை அறியாதவர் என்று சான்றிதலும் வாங்க வேண்டாம். ஆண்டவரை மறுதலித்து வேலையைத் தேடாதீர்கள். அப்படியிருந்தால் இன்றே மனந்திரும்புங்கள். உங்கள் சந்ததி ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெறுவதற்கு அதிக கவனம் செலுத்துங்கள். தினந்தோறும் வேதம் வாசித்து ஜெபிக்கிற பழக்கத்தை பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே கற்றுக்கொடுங்கள். அவர்கள் முதிர்வயதிலும் அதை பின்பற்றுவார்கள். பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். நீதி.22:6 எனக்கு பயந்து நடந்தால் என்மீது அன்பு கூர்ந்து வாழ்ந்தால் ஆயிரம் தலைமுறைக்கு இரக்கம் பாராட்டுவேன் என கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா 66:22

அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை, அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை, அவர்களும், அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள். 65:23

உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார், இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார். 59:21

ஆண்டவர் ஆசீர்வதிக்கும்பொழுது கண்டிப்பாக அதில் சந்ததிக்கான ஆசீர்வாதமும் இருக்கும். ஒரே நிபந்தனை கர்த்தருக்கு பயப்படுதல் மட்டுமே. நீங்கள் எவ்வளவாக கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தை சேர்த்து பிள்ளைகளுக்கு போதிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாக பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். (சங்.22:30)

ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை இத்தனை ஆண்டுகள் கடந்தும் அவர் மாற்றவில்லை. அப்பொழுது உங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை மாற்றுவாரா? ஒருபோதும் மாற்ற மாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கர்த்தாவே, உமக்கு பயப்படும் பயம் என்னில் அதிகரிக்கட்டும் என ஜெபியுங்கள். அப்பொழுது கர்த்தருடைய கிருபை உங்கள் வாழ்வில் பெருகும். அந்த கிருபை பெருகும்பொழுது உங்கள் சந்ததியும் ஆசீர்வாதமாயிருக்கும்.

இந்த செய்தியை You tube வாயிலாக கேட்க விரும்புகிறவர்கள் கீழே உள்ளே Link-ல் போய் பார்க்கவும்.

https://youtu.be/lIUN5HO0rfo?si=irgcOUg3WYyLyhFM




# We Are Hiring!!

PRAYER WARRIORS
Language Known
Tamil-Malayalam
Tamil- Telugu

ministryofjesushr@gmail.com

Male / Female || Christians Preferred





# Praise Report

# துதி அறிக்கை

## படிப்பில் வெற்றி



என்னுடைய சரீர பெலவீனத்தின் நிமித்தம் நான் Ph.D. முடிப்பேனா என்ற சூழ்நிலையில் இருந்தேன். மருத்துவர் ஒரு வருடத்திற்கு படிக்கக்கூடாது என சொல்லி விட்டார்கள். நானும் 8 மாதங்கள் வரை படிக்கவில்லை. என் உறவினர்கள் மூலம் நாகர்கோவிலில் கூட்டம் நடைபெறுவதை அறிந்து கூட்டத்திற்கு வந்தேன். என்னுடைய சூழ்நிலையை **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரரும் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள்.

அதன்பின் நான் படிக்க ஆரம்பித்தேன். Viva Voce–ல் எனக்கு Highly recommendable, Strongly Commendable என External Examiners சர்டிபிகேட் தரும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். இப்பொழுது SRM University–ல் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் வாழ்வில் கர்த்தர் செய்த இந்த அற்புதத்தை நான் மறக்கமாட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எனக்காக ஜெபித்த சகோதரருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**– திரு. ரெக்ஸ்மார்ட், நாகர்கோவில்.**




## அரிப்பு நீங்கியது!



எனக்கு பல மாதங்களாக காலில் அரிப்பு வந்து ரொம்ப கஷ்டப்பட்டேன். அரிப்பு வந்து சொறியும் பொழுது இரத்தம் வரும். மே மாதம் சென்னையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஜெப நேரத்தில் என்னை பெயர் சொல்லி அழைத்து, "அரிப்பு நோயினால் கஷ்டப்படுகிற சகோதரியை கர்த்தர் சுகமாக்குகிறார்" என சொன்னார்கள். அந்த நாளிலிருந்து எனக்கு அந்த அரிப்பு பிரச்சனை முற்றிலும் நீங்கி நல்ல சுகத்துடன் இருக்கிறேன். அற்புத சுகம் தந்த கர்த்தரை துதிக்கிறேன்.

**– Sis. சீதாலெட்சுமி, சென்னை.**

## உள்மனக் காயங்கள் மாறியது!



நாங்கள் திருச்சியில் நடைபெறுகிற அனைத்து கூட்டங்களுக்கும் தவறாமல் வந்துக் கொண்டிருக்கிறோம். பல நேரங்களில் மனவேதனையினால் செய்வது அறியாது திகைத்து இருக்கிறேன். தனி ஜெப நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எங்கள் பிரச்சனைகளை கேட்டறிந்து எங்களுக்காக ஜெபித்து ஆறுதல் கூறி அனுப்பியிருக்கிறார்கள். அதனால் பல ஆண்டுகளாக இருக்கிற என் உள்மனக் காயங்கள் மாறி கர்த்தருக்குள் ஆறுதலும் பெலனும் அடைந்திருக்கிறேன். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். ஐயா அவர்களுக்கும் எங்கள் நன்றியை கூறிக்கொள்கிறோம்.

**– திருமதி. மோனிகா, திருச்சி.**


**We Are Looking A New Fresh Talent to Join Our Team**

ACCOUNTANT
(B.com. / M.com. Graduates)
Skills Required : Tally ERP 9

ministryofjesushr@gmail.com

Male / Female || Christians Preferred




## காது நன்றாக கேட்கிறது

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் என் மருமகனுடைய காதில் உள்ள ஜவ்வில் ஓட்டை இருந்தது. இந்த பிரச்சனையை அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் வாயிலாக எழுதி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். கர்த்தர் தாமே மருமகனை அற்புதமாக சுகமாக்கினார். இதுவரை அவர் காதில் எந்த பிரச்சனையும் இல்லாமல் காது நன்றாக கேட்கிறது. தற்பொழுது அவர் வெளிநாட்டில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை துதிக்கிறேன். – திருமதி. ருக்மணி, சாத்தூர்.

## பணத்தேவைகள் சந்திக்கப்பட்டது

கடந்த ஜூலை மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்து கலந்துக்கொண்டேன். அப்பொழுது மிகுந்த பணநெருக்கத்தில் இருந்தேன். ஜெப வேளையில் என்னுடைய பணநெருக்கடி நீங்கும்படி ஜெபித்து சென்றேன். கூட்டம் முடிந்து வீட்டிற்குள் செல்வதற்கு முன்னாடியே Rs.37,000 பணம் எனக்கு கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

– திரு. அலெக்ஸாண்டர், அரியலூர்.

## அரசு வேலை கிடைத்தது



2019–ம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து கலந்துக் கொண்டேன். என் அக்கா மகள் பிரியாவிற்கு காவல்துறையில் வேலை கிடைக்கவேண்டும் என ஜெபித்து சென்றேன். 2020–ம் ஆண்டு மகளுக்கு காவல்துறையில் வேலை கிடைத்தது. ஜெபத்தை கேட்ட கர்த்தரைத் துதிக்கிறேன். – திரு. டேமு லிவிங்ஸ்டன், திருநெல்வேலி.

## சொந்த வீட்டை கர்த்தர் தந்தார்!



நாங்கள் 8 வருடமாக நாகர்கோவிலில் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தோம். கடந்த ஆண்டு கூட்டத்திற்கு வந்தப்பொழுது Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொந்த வீடு கிடைக்க ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயாவும் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் 5 மாதங்களுக்கு பிறகு சொந்த வீட்டை வாங்கி குடியிருக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

– திருமதி. வய்லெட் ரெஜி, நாகர்கோவில்

Malayalam Whats App No. +91 94889 32937

## கர்ப்பப்பை பிரச்சனை மாறி குழந்தை பாக்கியம் கிடைத்தது

எனக்கு கர்ப்பப்பையில் பிரச்சனை இருந்ததால் குழந்தை பாக்கியம் இல்லாமல் கஷ்டப்பட்டேன். 1996-ம் ஆண்டு பாளையங்கோட்டையில் உள்ள நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். தனி ஜெபத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக ஜெபித்து விட்டு கர்த்தர் உனக்கு ஆண் பிள்ளை, பெண் பிள்ளை என இரண்டு பிள்ளைகளை தருவார் என தீர்க்கதரிசனமாக கூறினார்கள். அதன்படியே கர்த்தர் எனக்கு இரண்டு பிள்ளைகளை தந்தார். இப்பொழுது அவர்களுக்கு 25 வயது, 21 வயது நடந்துக் கொண்டிருக்கிறது. தேவனுக்கே மகிமை!

**– திருமதி. கனகம்மாள், பாளையங்கோட்டை,**

## பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!



என்னுடைய மகனுக்கு 31 வயது ஆகிவிட்டது. திருமணம் நடைபெறவில்லை. ஆகவே மிகுந்த கவலையுடன் இருந்தேன். செப்டம்பர் மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது என் மகனுக்கு ஏற்ற துணை கிடைத்து விரைவில் திருமணம் நடைபெறவேண்டும் என பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். ஜெபத்தை கேட்ட கர்த்தர் அற்புதமாக மகனுக்கு ஏற்ற ஒரு பெண்ணை துணையாக கொடுத்துள்ளார். நவம்பர் மாதம் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். **– திருமதி. சொர்ணம், நாகர்கோவில்.**




CAMERA MAN & VIDEO EDITORS

(Any UG/PG Candidates)

Skills Required : with adequate experience
Able to work in Adobe Premiere Pro & After Effects

Male / Female, Christians Preferred

Apply to: ministryofjesushr@gmail.com

Tamil Whats App No. + 91 95004 87059

# 2024 நவம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிடத்திலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள். (ஆதி. 35:11)

02 ...இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன். (எரே. 46:27)

03 நீங்களோ, ...தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1பேதுரு 2:9)

04 உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அதுபெருகி, எண்ணி முடியாததாயிருக்கும் என்றார். (ஆதி.16:10)

05 நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. (சங்.37:25)

06 நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி.22:18)

07 தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே. (சங்.14:5)

08 அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கவும், அவன் ராஜாசனம் வானங்களுள்ள மட்டும் நிலைநிற்கவும் செய்வேன். (சங்.89:29)

09 உம்முடைய சந்தானம் பெருகி, உம்முடைய சந்ததியார் பூமியின் பூண்டுகளைப்போல இருப்பார்கள் என்பதை அறிந்துகொள்வீர். (யோபு 5:25)

10 கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும். (சங். 112:1-2)

11 உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். (ஆதி.13:16)

12 என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன். (உபா.5:10)

13 செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும். (சங். 112:2)

14 உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். (ஏசா. 54:13)

15 எங்கள் குமாரர் இளமையில் ஓங்கி வளருகிற விருட்சக் கன்றுகளைப்போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப்போலவும் இருப்பார்கள். (சங். 144:12)

16 உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசா. 44:3)

17 கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே இருந்தது. (லூக். 1:66)

18 உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். (சங்.128:3b)

19 உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். (ஏசா. 54:13)

20 பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. (லூக். 2:40)

21 வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறது போல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே.33:22)

22 அவன் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், நான் அவன் மிதித்து வந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்றும் ஆணையிட்டார். (உபா.1:36)

23 உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; (ஏசா. 59:21)

24 ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். (சங்.22:30)

25 ...உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; (எரே.30:10)

26 உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள். (ஏசா.54:3)

27 .... தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார். (சங்.18:50)

28 இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம். (ஏசா.8:18)

29 உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள்; அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும் என்று சொன்னேன். (சங்.102:28)

30 இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப்பட்டு மேன்மை பாராட்டுவார்கள். (ஏசா.45:25)

# ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்
# 1859-1947

## பிறப்பும் இளமைப்பருவமும்

1859-ம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்து தேசத்தில் யாக்சேர் நகரில் உள்ள மென்ஸ்டன் என்ற சிறிய கிராமத்தில் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் பிறந்தார். தந்தையின் பெயர் ஜான் விக்கிள்ஸ்வொர்த், தாயின் பெயர் மார்த்தா. ஏழ்மையின் நிமித்தம் ஆரம்பப் பள்ளிக்கு செல்ல இயலவில்லை. தன்னுடைய 6-ம் வயதிலேயே வயலில் கிழங்கு எடுக்கும் வேலைக்கு சென்றார். 7-ம் வயதில் தந்தையுடன் சேர்ந்து கம்பளி நூற்பாலை வேலைக்கும் சென்றார். அவருடைய 10-ம் வயதில் ஆலய ஆராதனைக்கு அவருடைய பாட்டி அவரை அழைத்துச் சென்றார். ஒருநாள் ஆலய ஆராதனையில் "இயேசு எனக்காக மரித்தார், அவருக்கு என் இதயத்தை தந்து விட்டேன்" என பாட ஆரம்பித்தார். 16-ம் வயதில் இரட்சண்ய சபையில் சேர்ந்து உபவாசித்து ஜெபிப்பதன் வல்லமையை கற்றுக் கொண்டார். முதலில் சிறுபிள்ளைகள் மத்தியில் ஊழியத்தை ஆரம்பித்தார். பிளம்பர் வேலையையும் கற்றுக் கொண்டார். அதில் வந்த வருமானத்தில் ஏழை சிறுவர்களுக்கு உதவிகள் செய்தார்.

## அற்புதம் செய்பவர் இயேசு

ஒரு நாள் கன்வென்ஷன் கூட்டம் முடிந்து மக்கள் தங்கள் வீடுகளை நோக்கி நடக்கலாயினர். அப்பொழுது 15 பேர் தங்களுக்கு சுகம் பெறவேண்டி ஸ்மித்திடம் ஜெபிக்க முன் வந்தனர். இரு கைகளிலும் ஊன்றுகோலுடன் வந்த மனிதன் மேல் கைகளை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தார் ஸ்மித். என்ன ஆச்சரியம்! அவன் தன்னுடைய ஊன்றுகோல்களை எறிந்து விட்டு துள்ளிக் குதித்தான். ஸ்மித்தால் நம்பவே முடியவில்லை. முதன்முதலாக தன் மூலமாக ஒரு மாபெரும் வல்லமையானது செயல்படுவதை உணர்ந்தார். ஆண்டவர் ஸ்மித்தைப் பயன்படுத்த ஆரம்பித்தார். அதன்பின் அவர் ஊழியத்தில் ஏராளமான அற்புதங்கள் நடைபெற்றது. கட்டிகள் மறைய ஆரம்பித்தன. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் புத்துணர்வுடன் செயல்படத் தொடங்கினர்.

இவரின் அற்புதசு கமளிக்கும் வரம் உலகமெங்கும் காட்டுத்தீபோல் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்து, அமெரிக்கா, நியூசிலாந்து, இலங்கை, ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, நார்வே, கலிபோர்னியா போன்ற நாடுகளில் இவர் மூலம் பெரிய அசைவு ஏற்பட்டு ஜனங்கள் ஆத்துமாவில் இரட்சிப்பையும் தெய்வீக சுகத்தையும் பெற்றனர். இவர் கைகளினால் எப்பொழுதும் எண்ணெய் பூசி ஜெபித்த உடனே அவர்கள் சுகம் பெற்றுவிடுவர். ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் நடந்தது போலவே மாபெரும் பணிகள் இவர் மூலம் நடைபெறத் தொடங்கியது.

இவருக்கு சிறுநீரகத்தில் கற்கள் இருந்தது. அதனால் அதிக வேதனைகளை அனுபவித்தார். அந்த வேதனையோடு மேடைக்கு வந்து தேவ செய்தியைக் கொடுத்து மக்களை ஆறுதல்படுத்தியுள்ளார். படிப்பறிவில்லாத இவர் தனது பாக்கெட்டில் புதிய ஏற்பாட்டை எப்பொழுதும் வைத்திருந்தார். தன் மனைவி மூலமாகவே வேதம் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். அதன்பின் 10 நிமிடம்கூட வேதம் வாசிக்காமல் இவரால் இருக்கமுடியாது. தொடர்ந்து வேதத்தை வாசித்துக்கொண்டே இருப்பார்.

இம்மாபெரும் ஆத்தும ஆதாயர் பள்ளிக்கு செல்லாதவர் என்பது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. ஒரு மனிதன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டால் ஆண்டவர் அவர் மூலம் அற்புதமாய் செயல்படுவார் என்பதற்கு ஸ்மித்தின் வாழ்வே ஓர் சாட்சி.

# S.J.SAVES TRUST

(நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபிரெயர் 13:16**



குறிப்பாக கிறிஸ்துமஸ் நாட்களில் 500 பிள்ளைகளுக்கு நாம் புத்தாடைகளை வழங்கி, கிறிஸ்துமஸ் விருந்து அளிக்க இருக்கிறோம். உங்கள் குடும்பத்தின் சார்பாக ஒரு பிள்ளைக்கு அல்லது இரண்டு பிள்ளைகளுக்கு புத்தாடைகள் வழங்க முன்வாருங்கள்

**ஒரு பிள்ளைக்கு ஆகும் செலவு Rs.1,500/-**
**500 பிள்ளைகளுக்கு ஆகும் செலவு Rs.7,50,000/-**

**ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய**

*Bank A/c. Name : S J SAVES TRUST*
*Account No. 019150310875369*
*Bank Name :Tamilnadu Mercantile Bank*
*Branch : Palakarai, Trichy*
*IFSC Code : TMBL 0000019*
*A/c Type : Current*

செப்டம்பர் மாதம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஓலப்பாளையம், சின்ன மருதூர், குமாரசாமி பாளையம், கருப்பண்ணன் நகர், ஜேடர்பாளையம் ஆகிய ஊர்களில் நமது டியுஷன் சென்டரில் படிக்கிற 125 மாணவ மாணவியருக்கு மழைக்காலத்திற்கு தேவையான பொருட்கள், பள்ளிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மதிய உணவு (சிக்கன் பிரியாணி, ஸ்வீட், கார வகைகள்) வழங்கப்பட்டது.

**வழங்கப்பட்ட பொருட்கள்**

நோட்டு, பேனா, ஸ்கேல், ஸ்கூல் பேக், டிபன்பாக்ஸ், குடை, போர்வை, புரோட்டின் பவுடர், டானிக் ஆகியவை ஆகும்.

பிள்ளைகள் மழைக்காலத்தில் குடையில்லாமல் அதிக கஷ்டப்பட்டார்கள். Dr.ஆனந்த ஸ்திரா ஐயா அவர்கள் கொடுத்த குடை பிள்ளைகளுக்கு உதவியாக இருந்தது என பிள்ளைகளின் பெற்றோர்கள் கூறினார்கள்.

ஒரு சில பிள்ளைகளுக்கு சரியான ஸ்கூல் பேக் இல்லாமல் பழைய கிழிந்த நிலையில் உள்ள ஸ்கூல் பேக்-ஐ பயன்படுத்தி வந்தார்கள். ஐயா கொடுத்த புதிய ஸ்கூல் பேக் அதிக உதவியாக இருக்கிறது என பிள்ளைகள் கூறினார்கள்.



பிள்ளைகளின் பெற்றோர்கள் சமூகத்தில் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்கள். குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சில பிள்ளைகளுக்கு பெற்றோர் இல்லை. ஒரு சில பிள்ளைகளின் தகப்பன்மார் குடிபழக்கத்திற்கு அடிமையானவர்கள். அதன் நிமித்தம் கடனில் கஷ்டப்படுகிறார்கள். இத்தகைய குடும்ப சூழ்நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு *S.J.SAVES TRUST* மூலம் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அன்புள்ளம் கொண்ட பங்காளர்கள் இந்த பிள்ளைகளை மனதில் வைத்து தொடர்ந்து தாங்குங்கள்.








## நாமக்கல் மாவட்டத்தில் SJ SAVES TRUST மூலமாக உதவி பெற்ற பிள்ளைகள்







நமது நாட்டின் தலைசிறந்த தொழிலதிபர்களில் ஒருவரான ரத்தன் டாடா கடந்த சில நாட்களுக்கு முன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடலில் ரத்த அழுத்தம் குறைந்ததாகக் கூறப்பட்டது. மருத்துவமனையில் அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், செவ்வாய்கிழமை இரவு அவர் உயிரிழந்தார். அவருக்கு வயது 86. அவரது உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில் ரத்தன் டாடாவின் இறுதிச் சடங்கு மாலை நடந்தது. இதில் டாடா குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ரத்தன் டாடா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெற்றது.

மதிப்பிற்குரிய தொழிலதிபர் ரத்தன் டாடாவின் இழப்பால் தேசம் துக்கத்தில் உள்ளது என்று ANI தெரிவித்துள்ளது.

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வியாழன் அன்று ரத்தன் டாடாவுக்கு அஞ்சலி செலுத்தினார். அவரை இந்தியாவின் நவரத்னங்களில் ஒருவர் என்று வர்ணித்தார். அவருடன் சிறிது நேரம் செலவழிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அவரது மரணம் தேசத்திற்கு பெரிய இழப்பு. கொள்கை வகுப்பாளர்களாகிய எங்களுக்கு அவரது நுண்ணறிவு, ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் விலைமதிப்பற்றவை.



டாடாவின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது என்று அமிதாபச்சன் குறிப்பிட்டார்.

கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் டாடா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இது தேசத்தின் மீது நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சத்திஷ்கர் முதல்வர் கூறினார்.

பெங்களூருவில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன் கார்கே, ரத்தன் டாடாவை பிறப்பிலேயே தொழிலதிபர் மற்றும் பரோபகாரர் என்று விவரித்தார். அவர் எப்போதும் சரியானதைச் செய்தார். குறிப்பாக அவர் தொழில்துறை அமைச்சராக இருந்த காலத்தில். ஜப்பான் பிரதமர் இந்தியா வந்தபோது அவரைச் சந்திக்கும் வாய்ப்பை அவர் நினைவுகூர்ந்தார். "என் இதயத்திலிருந்து அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன்" என்று கார்கே கூறினார். டாடாவின் பாரம்பரியத்தை கௌரவித்தார்.

# குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**செகந்திராபாத்தில்**

**நவம்பர் 9**
சனிக்கிழமை

நேரம்
காலை 9.30 மணி
முதல்
மதியம் 2.00 மணி
வரை

இடம் : சில்வர் டிராப் ஃபங்ஷன் ஹால்,
பெராரா பில்டிங், பார்க் லைன்,
மினர்வா காம்ப்ளக்ஸ் அருகில்,
95/1 சரோஜினி தேவி ரோடு,
செகந்திராபாத்.

**விஜயவாடாவில்**

**நவம்பர் 10**
ஞாயிற்றுகிழமை

நேரம்
மாலை 4.00 மணி
முதல்
இரவு 9.00 மணி
வரை

இடம் : ஹோட்டல் அயிலாபுரம்,
கன்வென்ஷன் ஹால்,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
காந்தி நகர், விஜயவாடா, ஆந்திரா.





தேவ செய்தி
**Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**
**Dr. ஜேன் ஜாஷ்வா**

தொடர்புக்கு : செல் 91770 87860, 99445 36343

*திருச்சியில்*

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**நவம்பர் 30**
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபமையம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி : **Dr. ஆனந்த ஸ்திரா** & குடும்பத்தினர்

தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 - 2741925

Telugu What App No. +91 91770 87860

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விவரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## வங்கிக் கணக்குகளின் விவரம்



**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)

### மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

**Bank A/c. Name : SJ SAVES TRUST**
**Account No. 36477148891**
**Bank Name : State Bank of India**
**Branch : Cantonment, Trichy Main Branch**
**IFSC Code : SBIN 0000930**
**A/c Type : Current**

## நரம்பு பிரச்சனை மாறியது!



என்னுடைய கண்ணில் நரம்பு பிரச்சனை ஏற்பட்டு அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். அதனால் உயரமாக உள்ள எதை பார்த்தாலும் கோணலாக இருப்பது மாதிரி எனக்கு தெரியும். கடந்த ஆகஸ்டு மாதம் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தேன். ஜெப நேரத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் "கண் நரம்பு பிரச்சனையோடு வந்திருக்கிற சகோதரியை கர்த்தர் சுகமாக்குகிறார்" என சொன்னார்கள். அந்த நேரமே என்னை பரிசோதித்துப் பார்த்தேன். நரம்பு பிரச்சனையும் நீங்கியது. பார்வையில் எந்த குறைபாடும் இல்லை. எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

என் தம்பி கேன்சர் வியாதியினால் அதிக வேதனை அடைந்தான். திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து அவனுக்காக ஜெபித்து சென்றேன். இப்பொழுது தம்பி எந்த வேதனையும் இல்லாமல் நல்ல சுகத்துடன் இருக்கிறான். தேவனுக்கே மகிமை!

– Sis. கமலம்பாள், ஒட்டன் சத்திரம்.

## வல்லமை இறங்கியது! சுகமானேன்!



எனக்கு நீண்ட நாட்களாக இடுப்புவலி, வீக்கம் இருந்தது. அதிக பெலவீனத்துடன் கூட்டத்திற்கு வந்தேன். என்னால் உட்காரகூட முடியவில்லை, நிற்கவும் முடியாமல் ரொம்ப கஷ்டப்பட்டேன். Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் நோயாளிகளுக்காக ஜெபித்தார்கள். "ஜெபவேளையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அக்கினியாய் இறங்குகிறது" என சொன்னார்கள், அந்த நேரத்தில் ஆவியானவரின் வல்லமை என் மேலும் இறங்கியது. அந்த நேரமே எனக்கு இருந்த அனைத்து பெலவீனமும் நீங்கினது. இப்பொழுது உட்காரவும், நிற்கவும் என்னால் முடிகிறது, பரிபூரண சுகத்தைக் கொடுத்த கர்த்தரை துதிக்கிறேன்.

– திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.

joshua@mojindia.org


# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த தேவ சேய்தி. அனல்மூட்டும் தேவ செய்தி.
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி. மத. இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக
இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.



Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

அருப்புக்கோட்டையில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

இடம்: CSI சமுதாய கூடம்,
CSI வளாகம், மதுரை ரோடு,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
அருப்புக்கோட்டை.

நேரம்
காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

நவம்பர் 16
சனிக்கிழமை

தலைமை : Rev. ரஞ்சன் கனகமணி
சி.எஸ்.ஐ. சபை ஆயர்,
அருப்புக்கோட்டை டவுன்

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா

கூட்ட முடிவில்
தனி ஜெபம்
ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு : 94888 45627, 98944 63678 & Bro. Raju 88258 17183

தாம்பரத்தில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

இடம் : அன்னை அருள் திருமண மாளிகை
வேளச்சேரி ரோடு, கிழக்கு தாம்பரம், சேலையூர்,
மாற்கு சர்ச் எதிரில், கேம்ப் ரோடு பேருந்து நிறுத்தம்,
சென்னை – 73

நவம்பர் 23 சனிக் கிழமை

நேரம்
காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை



தேவ செய்தி:
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

(கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்)

சென்னையில்

## சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டம்

நவம்பர் 24 ஞாயிற்றுக் கிழமை

இடம் : FAITH ACA,
12-A, ஈஸ்வரி நகர், பல்லாவரம்,
சென்னை 43
நேரம் : மாலை 6.00 மணி

தேவ செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு :
செல் 76675 52299, 94888 45627

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,